Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

UNIVERSITY LIBRARY
15 SEP 1971

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் ரெஜிஸ்டர் எண்; 69
சோலை 220

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 216

ஆவணி 30 றஜப் 24 புதன்கிழமை (15 9 71)

சகலவிதமான
றேடியோக்களும்
உத்தரவாதத்துடன்
திருத்திக்கொடுக்கப்படும்.
றேடியோ இன்ஜினியரிங் வேக்ஸ்
உரிமையாளர்:-
காமினி குணசேகரா
28,பஸார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(பள்ளிவாசலுக்குப் பக்கத்தில்)

# வடக்கில் விவசாயம், கூட்டுறவு அபிவிருத்தி பற்றி ஆராய்ச்சி

## மகாவலி அபிவிருத்திச்சபை குழு யாழ்.நகர் வந்தது

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதியில் விவசாய அபிவிருத்தி பற்றியும், கூட்டுறவு வளர்ச்சி பற்றியும் ஆய்வொன்றை மேற்கொள்ளுவதற்காக மகாவலி அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த ஐவர் கொண்டகுழுவொன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளது.

மகாவலி அபிவிருத்திச் சபையின் பொதுமுகாமையாளர் திரு. பத்திராஜ விமலரத்தின தலைமையில் இக்குழுவந்துள்ள இக் குழு நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள சமத்தொழில் இலாகாவுக்சென்று விவசாயம் சம்பந்தப்பட்ட சில ஆய்வுகளை நடத்தியது.

பயிர்செய்கைக் குழுக்கள் இயங்கும் முறைபற்றியும், நெற்காணிச் சட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கையாளரிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணம் சம்பந்தமாகவும் இக் குழுவினர் இங்குள்ள அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைநடத்தினர்.

வடபகுதியில் விவசாயம் கூட்டுறவு அபிவிருத்தி பற்றிய தனிஆய்வு ஒன்றை நடத்துவதற்காக இங்குள்ள இக்குழு தனது விவசாயம் சம்பந்தமான ஆய்வைமுடித்துக்கொண்டதும் கூட்டுறவு அபிவிருத்தி பற்றிய தனது ஆய்வை மேற்கொள்ளும்.

## நவத்துக்கு லண்டனில் அமோக வரவேற்பு

லண்டன், செப், 13

தமிழரசுக் கட்சித் தலைவர்களில் ஒருவரும் சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினருமான திரு வி. என் நவரத்தினம் பாரிஸில் நடைபெறும் சர்வதேச பாராளுமன்ற மகாநாட்டிற்கு இலங்கையின் பிரதிநிதிகளில் ஒருவராகச் சென்றபோது லண்டன் மாநகரில்வாழும் தமிழ் மக்கள் அவருக்கு லண்டன் விமான நிலையத்தில் அமோக வரவேற்பு அளித்தனர்.

விமான நிலையத்தில் இலங்கைத் தூதரகத்தைச்சேர்ந்த கல்விஅதிகாரி திரு தேசரத்தினம், வழக்கறிஞர் ஏ ஆர் ஆசீர்வாதம், லண்டன்முரசு ஆசிரியர் திரு சபா சதானந்தன், தமிழரசுப் பிரமுகர்களில் ஒருவரான ஏ வே இராமலிங்கத்தின் புதல்வன் திரு சிவலிங்கம், தமிழரசுத்தந்தை செல்வநாயகத்தின் முன்னாள் காரியதரிசி திரு வரதராசன், திரு சுந்தரம் ஆகியோர் திரு நவரத்தினத்தை வரவேற்றனர்

திரு நவரத்தினம் விமான நிலையத்தில் வைத்து தமக்கு மாலை அணிவிக்கவந்தவர்களை மாலை அணிவிக்கவிடாது மாலைகளைக் கையிலேயே பெற்றுக்கொண்டார் கொடி காமத்தைச் சேர்ந்த தமிழரசுத்தொண்டர் ஐயா என்றழைக்கப்படும் வேலு மரணமானதிலிருந்து இதுவரை தாம் மாலை அணியவில்லை என்று அவர் தமக்கு மாலை அணிவிக்க வந்தவர்களிடம் கூறினார்.

## பொதுமக்கள் தொடர்பை புதிய கல்விமுறைஏற்படுத்தும்

மாத்தறை, செவ்

மாணவர் ஆசிரியர் பெற்றோர் ஆகிய மூவருக்கும் இடையில் நெருங்கிய தொடர்பை புதிய கல்வி முறை ஏற்படுத்தும் என்று மாத்தறை ராகுலவித்தியாசாலையில் நடைபெற்ற பிரிவுபசாரவிழாவொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய உதவிக்கல்வியமைச்சர் திரு பீ வை துடாவை கூறினார்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

நல்லறிஞர்களைத் தோற்றுவித்து அதன் மூலம் நல்லதொரு நாட்டை உருவாக்கும்கடமை ஆசிரியர்களினதாகும். எனவே ஆசிரியர்கள் நாட்டுப்பற்றோடு விசுவாசமாகச் செயலாற்ற வேண்டும்.

கொருவதேடும் அவாவினால் பல ஆசிரியர்கள் பாடசாலையில் தங்கள் கடமைகளைச் சரிவரச்செய்யாது தனிப்பட்டமுறையில் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்துப் பொருள்சம்பாதிக்கிறார்கள். இதற்கெல்லாம் தற்போதைய அரசாங்கம் முற்றுப்புள்ளி வைக்கிறது

பண்டிதர்களை உருவாக்கி வேலையில்லாப் பிரச்சினையை வளர்ப்பதுதான் கல்வியின் நோக்கமாகவிருக்கக்கூடாது நல்ல பிரஜைகளை உருவாக்குவதே கல்வியின் நோக்கமாகும்.

## காலியில் வைரம்

காலி, செவ்.

காலி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தினமும் வைரம் கண்டுபிடிக்கப்படுகிறது. குறிப்பாக இனிடுமா, உடுகம, யக்கமுல்ல ஆகிய இடங்களில் பெருமளவில் காணப்படுகிறது. சட்டவிரோதமான முறையில் வைரம் தோண்டுவோர் பொலிசாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு நீதவானுல் அபராதம் விதிக்கப்பட்டுள்ளன.

## வட்டுக்கோட்டையில் கூட்டுறவு ஐவுளி ஆலை

யாழ்ப்பாணம், புதன்

வட்டுக்கோட்டை தொகுதியில் கூட்டுறவு அடிப்படையில் ஐவுளி ஆலை ஒன்று நிறுவப்படவிருப்பதாக வட்டுக்கோட்டை எம் பி திரு ஏ தியாகராசா நேற்றுத் தெரிவித்தார்.

இந்த ஐவுளி ஆலைமூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவு தீர்க்கலாமென்றும் விரைவில் மேலும் பல தொழிற்சாலைகள் நிறுவப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வடபகுதியை அபிவிருத்தி செய்ய புதிய திட்டமொன்றைத் தயாரித்து அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் தெரிவித்தார்.

அக்டோபர் மாதம் 1-ம் திகதி வட்டுக்கோட்டைத் தொகுதியில் நிறுவப்படும் ஐவுளி ஆலை அத்திபாரக்கல் நாட்டப்படுமென்றும் தெரிவித்தார்.

## 60 நாடுகளில ரஷ்ய மொழி

மாஸ்கோ, செப் 14

இந்தியா, இத்தாலி, பின்லாந்து, மேற்கு ஜெர்மனி, ஸ்வீடன் முதலிய இடங்களில் பள்ளிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் ரஷ்ய மொழி கற்பிக்கப்படுகிறது. இங்கு ரஷ்ய மொழியில் பாடப்புத்தகங்களை வெளியிடும் பணியில் பங்குகொள்ளுமாறு சோவியத் நிபுணர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். இப்பொழுது 60க்கு மேற்பட்ட நாடுகளில் ரஷ்ய மொழியயிலப்படுகிறது. இந்த நாடுகளின் வேண்டுகோளுக்கேற்ப, சோவியத் ஆசிரியர்கள் இங்கே பணியாற்றுகின்றனர். ரஷ்ய மொழியிலும் ஆசிரியர்களுக்காகவும், மாணவர்களுக்காகவும், சோவியத்நாட்டில் விசேட வகுப்புகளும், கருத்தரங்குகளும் நடத்தப்படுகின்றன. ஐ. நா. சபையின் அதிகாரபூர்வமான மொழிகளில் ஒன்றாக ரஷ்ய மொழி விளங்குகின்றது.

.....

பருத்தித்துறை, செவ்

கட்டைவேலி ஆரம்ப கூட்டுறவுச் சங்க செயலாளர் சாரதி கே. சிதம்பரம்பிள்ளை தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

## 100 பேர் புயலுக்குப் பலி

மனிலா, செப் 14

மத்திய அமெரிக்காவில் வீசிய கடும்புயல் காரணமாக 100 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர்.

இலட்சக்கணக்கான பெரும் பொருட்சேதமும் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. கரையோரப் பகுதிகளில் உள்ள பலவீடுகள் மணலால் மூடப் பட்டுவிட்டதாகவும் இப்பகுதிகளில்உள்ள மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

பருத்தித்துறை கொலை வழக்கு

## ‘10 மாதங்கள் வரை திறப்பு என்னிடம் இருந்தது’

### இன்ஸ்பெக்டர் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

‘குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தபின்னர் 9 அல்லது 10 மாதங்கள்வரை திறப்பு எனது பொறுப்பில் இருந்தது. அதன் பின்னரே திறப்பை கோர்ட்டின் பாரத்தில் ஒப்படைத்தேன்.

பருத்தித்துறை கொலை வழக்கில் 1-வது எதிரி சார்பில் ஆஜரான அட்வகேட் ஆர். ஈ. தம்பிரத்தினம் குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சியமளித்த இன்ஸ்பெக்டர் செனிவரத்ன மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில்நேற்று 14-வது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

குறுக்கு விசாரணையின் போது இன்ஸ்பெக்டர் செனிவரத்தின மேலும் கூறியதாவது: திறப்பு ஒரு முக்கியமான தடயப் பொருள். குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் போது திறப்பு என்னிடம் இருந்தது.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

## வரிவிளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகர ணங்கள், ஒட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) என்ஜினியரின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெஷின் கொம்பனி 95. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3524

காலம் பெறுமதியானது. ஒரு சைக்கட் மிக்கவைற் சலைப்பவுடரின் அநேக துணிகளை சலவைசெய்யலாம் வெற்றுறை ஒன்றை அனுப்பி வெளியீட்டுப் புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். மிக்கவைற் சோப் தொழிற்சாலை. யாழ்ப்பாணம். 3520

### தேவை

கடைச்சல் பொருத்து வேலைக்கு ஓர் சாதாரணதர வேலையாள் 25 வயதிற்குட்பட்டவர் தேவை. விண்ணப்பிக்கவும். யந்திரம்ஸ், 48, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். 3573

### விற்பனைக்கு

ஸ்ரீகாந்தா அச்சக வெளியீடு ஐந்தாம் வகுப்பு மாணவர் தேர்ச்சிக்கு புதுமுறை மாதிரி வினாக்கள் கணிதம்-75 சதம், தமிழ்-75 சதம் ஆங்கிலம்-75 சதம், சூழல்-75 சதம். விவேகானந்த சபைப் பரீட்சைக்கும் அமைவான சைவசமய பாட மாதிரி வினாக்கள் 95 சதம். ஸ்ரீகாந்தா அச்சகம்—புத்தகசாலை, யாழ்ப்பாணம் 3551

### விற்பனைக்கு

99 ஜவ்வாதுபத்திகள்; திறம் ஜவ்வாது மணம்கொண்ட தரமான பத்திகள். இதன் ரம்மியமான வாசனையை மிகவும் விரும்புவீர்கள். எங்கும் கிடைக்கும். எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, மருந்துக்கடை, யாழ்ப்பாணம். 3523

1 1/2 பரப்புக் காணியுடன் கல்வீடு இணுவிலுடன் பள்ளிக்கூடங்கள், கோயில் சமீபமானது. ரோட்டு லைட் தண்ணீர் வசதியுண்டு. சுன்னாகம் - கொழும்புத்துறை மெயின் ரோட்டிற்கு அருகாமையில். விண்ணப்பிக்க: 'மிதிலா', 49, கொழும்புத்துறை வீதி, கண்டுக்குளி. 2659

### தேவை

பெற்றோல் நிலையமொன்றிற்கு பம்பர் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 3577. C/ஈழநாடு யாழ்ப்பாணம். 3577

தேவன்ஸ் தயாரிப்புகள் தயார் செய்வதற்குப் பெண்பிள்ளைகள் தேவை. குறிப்பு: தங்குவதற்கு இடவசதி உண்டு தேவன்ஸ் இன்டஸ்றீஸ், 51, மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம் 3580

ஆவரசம் இலை தொகையாகத் தேவை. தொடர்பு கொள்ளவும். தேவன்ஸ் இன்டஸ்றீஸ், யாழ்ப்பாணம். 3579

## கேள்வி விளம்பரம்

மானிப்பாய் பட்டினசபை நகரமண்டபக் கட்டிட வேலைக்கான சீல்' வைத்த கேள்விகள் உரிய படிவத்தில் 30-9-71 காலை 10 மணி வரை என்னால் ஏற்கப்படும்.

அரசினர் ஒப்பந்தகாரரில் ரூபா 50,000/-வுக்கு மேல் பதிவுள்ளவர்கட்கு மட்டும் கேள்விப்பத்திரம் வழங்கப்படும். கேள்விப்பத்திரம் 29-9-71 நண்பகல் 12-00 மணிக்கு முன் இச்சபையில் கேள்விப்பிணை ரூபா 50/-ம் பத்திரப்பணம் ரூபா 10/-ம் கட்டியதும் வழங்கப்படும்

ஏனைய விபரங்கள் இக்காரியாலயத்தில் பெறலாம்

சி. பொ. வ மா. க முதலியார்
தலைவர்.

பட்டினசபை, மானிப்பாய் பட்டினசபைக்காரியாலயம், மானிப்பாய்,
13-9-71 3021

## தெல்லிப்பழை பல நோ. கூ. சங்கம் (வரையறுத்தது)
### தெல்லிப்பழை அறிவித்தல்

தெல்லிப்பழை பல நோ. கூ: சங்கத்தில் 5000க்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. 22-9-71 க்கு முன்னர் ரூபா 200/, மேற்படி சங்க அலுவலகத்தில் கட்டி கேள்விப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளவும்

கேள்விப்பத்திரம் 24-9-71 பகல் 12 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்

அ மாணிக்கவாசகர்
பொதுமுகாமையாளர்
13-9-71 3023

லாலாசோப்

## கரபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன் அச்சுவேலி லாலாசோப் ஸ்தாபனத்தினரின் ஆதரவில், யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே நடைபெற்று வரும் 'மின்ஒளி' கரபந்தாட்டப் போட்டியில், கடந்த வாரம் நடைபெற்று முடிந்த முடிவுகள் வருமாறு:-

வல்வெட்டி குணசேகரா விளையாட்டுக் கழகம், இமையாணன் ஜெயசீலராரை 2 1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

கே. கே. எஸ். ஐக்கிய விளையாட்டுக் கழகம், அண்ணா 'ஏ' பிரிவுக் கோஷ்டியை 2-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

மருதடித்துறை எதிரொலி விளையாட்டுக் கழகம், நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக 'பி' பிரிவுக் கோஷ்டியை 2-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது

அச்சுவேலி நியூஸ்டார் விளையாட்டுக் கழகம், நெல்லியடி வெள்வெற் விளையாட்டுக் கழகத்தை 2 0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

வதிரி பொம்போஸ் விளையாட்டுக் கழகம், புத்தூர் உதயசூரியன் 'ஏ' பிரிவுக் கோஷ்டியை 2-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

புத்தூர் உதயசூரியன் 'பி' பிரிவுக் கழகம், கைதடி மின்னொளி கழகத்தை 2-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது.

கே. கே. எஸ். டெவலப்மன் கழகம், சுதுமலை முரசொலி கழகத்தை 2-1 ஆட்டங்களால் வென்றது.

புத்தூர் உதயவானம் கழகம், சிறுப்பிட்டி ஜனசக்தி விளையாட்டுக் கழகத்தை 2-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது

தொண்டமானாறு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகம், அச்சுவேலி கலாஜோதி கழகத்தை 2-0 ஆட்டங்களால் வெற்றி பெற்றது

புத்தூர் இரத்தினம் விளையாட்டுக் கழகம், சிறுப்பிட்டி அண்ணா 'பி' பிரிவுக் கழகத்தை 2-1 ஆட்டங்களால் வெற்றி பெற்றது. (தேதி)

---

ஆரியாலை, செல்வ நல் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் புதிதாக ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பிகையின் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

## 1. விற்பனை
### பூநகரிக் கிராமசபை

எறிக்கா. தமிழ்க் கடைச்ச, திருத்தஞ் செய்து உபயோகிக்கக்கூடியது 29-9-71 மு.ப. 10-00 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்கப்பெறும்.

வை. வல்லிபுரம்
தலைவர்
பூ. கி. ச.

பூ. கி. ச.
13-9-71

## 2. அறிவித்தல்
### பூநகரிக் கிராமச்சபை

பூநகரிக் கிராமச்சபை எல்லைக்குள் இருக்கும் தென்னந்தோட்டங்களின் உரிமையாளர்கள் தயவுசெய்து தங்கள் விலாசத்தையும் ஏக்கர் தொகையையும் 30-10-71-க்கு முன் தந்துதவுமாறும் வரிநிலுவைகளைச் செலுத்துமாறும் அன்புடன் வேண்டுகின்றேன்:

வை, வல்லிபுரம்
அக்கிராசனர்,
கி. ச. பூநகரி

பூநகரி கி. ச.
13-9-71 3022

## 'கட்சிகள் குறையும்'
-கருணாநிதி

சென்னை செப் 14

இன்னும் 5 அல்லது 10 ஆண்டுகளில் பாரதத்தில் கட்சிகளின் எண்ணிக்கை குறைந்துவிடும். மாநிலங்களில் தமிழ் நாட்டில் தி. மு. க. போன்று ஒருகட்சி வலமடையும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால் கலாநிதிப் பட்டம் அளிக்கப்பட்டதை பொட்டிச் சென்னையில் தமக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவொன்றில் உரையாற்றுகையிலேயே கலைஞர் கருணாநிதி இவ்வாறு கூறினார்

இவ்விழாவிற்கு தமிழ் நாடு கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமைதாங்கினார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 15—9—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9 00)

249 மீ அல்லது 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-00 இசை வேளை, 8-15 இஸ்லாமிய பாடல்கள்.

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 கிறிஸ்தவ நிகழ்ச்சி, 6-30 கண்ணகி காவியம், 6-50 விவசாய நிகழ்ச்சி, 7-00 வயலின் - நிலைய வித்துவான்கள், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலந்துரையாடல், 10-00 நேயர் கேட்டவை, 10-30 செய்தித் தொகுப்பு.

---

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரி. எம். சௌந்தரராஜன்
ஏ. எல். ராகவன்; ராஜ்ஸ்ரீ
நடித்த
# கல்லும் கனியாகும்

ராணி (யாழ்ப்பாணம்)
ஜெமினி - சரோஜாதேவி நடித்த
தினசரி 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
# சிநேகிதி

மனோகரா (யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
ரவிச்சந்திரன் — பாரதி
தினசரி 2-30 6-30 10-00 சனி, ஞாயிறு 10-30 நடித்த
# சிநேகிதி

தினசரி 4 காட்சிகள்
வின்சர் [யாழ்ப்பாணம்]
★ ஜெமினிகணேசன்
★ கே. ஆர். விஜயா
நாகேஷ், பி. எஸ். வீரப்பா, நிர்மலா
நடித்த
# சங்கமம்

உள்ளத்தைத்தொடும் 5-வதுவாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00
மற்றும்
கெப்பிட்டல் — பிளாஸா
திரைகளில்



சிவாஜி கணேசன்
[3 மாறுபட்ட வேடங்களில்]
ஜெயலலிதா
நம்பியார் — நாகேஷ்
சுந்தரராஜன்
நடித்த
# தெய்வ மகன்

இன்று மட்டும்
லிடோ [யாழ்நகர்]
(காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30)
★ ஆனந்தன் ★ ஹேமலதா
அசோகன் ★ காமினி ★ ராம்தாஸ்
நடித்த
# விஜயபுரி வீரன்
[புத்தம் புதிய கொப்பி]

நாளை 16-ந் தேதி முதல்
லிடோ (யாழ். நகர்) கிங்ஸ்லி (கொழும்பு)
திரைகளில்
# தபால்காரன் தங்கை

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி: 4-30 மட்டும்
சனி, ஞாயிறு 10-30
DEATH LAID AN EGG

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஆனந்தன்-ராமதாஸ்
நடித்த
வீரத்திருமகன்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
பி ப 2-30, 6-30, 10-00
சிவாஜி - கே. ஆர். விஜயா
ஊட்டிவரை
உறவு

REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m.
Stephen Boyd
Camilla Strav
in
ASSIGNMENT K
(Technicolor)

தினசரி பி. ப. 2-00, 9-45
எம். ஜி. ஆர்.
சரோஜாதேவி
நடித்த
நாடோடி
(புதிய கொப்பி)

## வேப்பங்கொட்டை தேவை

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு, திருக்கோணமலை ஆகிய இடங்களில் வைத்துப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ளவும்.

சுந்தரம் பிறதர்ஸ்
ஆயுள்வேத மருந்துகள், மருந்துச்சரக்குகள் வியாபாரிகள்
73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# ‘முஜிபுருக்கு கிழக்கு வங்கத்தை ஆள உரிமையுண்டு’

## கோலாலம்பூர் மகாநாட்டில் கானப் பிரதமர் வலியுறுத்து

கோலாலம்பூர், செப்ரம்பர் 1

**கிழக்கு வங்கத்தை ஆளும் உரிமை முஜிபுருக்கு உண்டு. கானப் பிரதமர் சாம்ராஜ்ய மாநாட்டில் இதை ஆணித்தரமாக வலியுறுத்தினுர்**

கிழக்கு வங்காள தேர்தலில் அவாமிலீக் கட்சித்தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் பெரும்பான்மைப் பலத்தை பெற்றுள்ளார். மக்கள் அவரை ஆதரித்துள்ளனர். ஐ. நா மனித உரிமைச் சட்டத்தின்படி அவருக்கு மக்கள் விரும்பிய ஆட்சியை அமைக்க உரிமையுண்டு. ஆதாவது அந்நாட்டை ஆளும் உரிமை அவருக்கு இருக்கிறது.

கோலாலம்பூரில் நடைபெறும் சாம்ராஜ்ய பாராளுமன்ற மகாநாட்டில் கான பிரதமர் மேலும் உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

இம்மாநாட்டில் வங்காள தேசப் பிரச்னை முக்கிய இடம்பெற்றது.

இந்தியா வந்துள்ள 80 லட்சம் அகதிகள் பாதுகாப்புடன் தமது நாட்டுக்குத் திரும்பிச் செல்வதற்கு வழிவகை செய்யப்படவேண்டும் என்று பாரத ஆட்சிமன்ற சபாநாயகர் மாநாட்டில் வற்புறுத்தினுர். இது பாகிஸ்தான் - இந்திய பிரச்னை அல்ல. கிழக்குப் பாகிஸ்தான் மேற்குப் பாகிஸ்தான் சண்டையே இது. இதைச் சமாதானமாகத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை யாஹ்யாகான் அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று 144 சாம்ராஜ்ய நாட்டுப் பிரதிநிதிகளும் தங்கள் தங்கள் அரசாங்கங்களிடம் வற்புறுத்த வேண்டும் என்று சபாநாயகர் கேட்டுக்கொண்டார்.

இலங்கையின் சார்பில் பொதுநிர்வாக உள்நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார்.

இம்மாநாட்டில் உரையாற்றிய பிரிட்டிஷ் பிரதமர் திரு எட்வேட் ஹீத் வங்காள தேச பிரச்னையை சர்வதேச கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும் எனக் கூறினுர்.

இம்மகாநாட்டை ஆரம்பித்து வைத்து மாநாட்டிற்கு வந்திருந்த சாம்ராஜ்ய மாநாட்டு அங்கத்தவர்களை வரவேற்றுப் பேசிய மலேஷிய பிரதமர் துன் அப்துல் ரசாக், வளர்ச்சியடைந்து வரும் நாடொன்றில் எப்பொழுதும் 100 ஆண்டு காலம் அநுபவம் பெற்ற நாடுகளில்போன்று ஜனநாயக கோட்பாடுகளைப் பாதுகாப்பது என்பது இயலாத காரியம் எனக் குறிப்பிட்டார்.

# புற்று நோய்க்கு காசநோய் தடுப்பு மருந்து

## டாக்டர் றெபேர்ட்போல்ட்வினின் புதிய கண்டுபிடிப்பு

லண்டன், செப் 14

உடலில் புற்றுநோய் மேலும் பரவாமல் தடுக்கும் அல்லது குறைக்கும் சக்தி காசநோய்த் தடுப்பு மருந்தான பி சி ஜிக்கு உண்டு என்று மிருகங்களில் செய்யப்பட்ட சோதனைகளிலிருந்து நிரூபணமாகியுள்ளது.

“எலிகள் மீது செய்யப்பட்ட பரிசோதனைகள் பி சி ஜி மருந்து உடலில் தொடர்ந்து பரவுவதைத் தடுத்துவிடுகிறது என்று நொட்டிங்ஹம் பல்கலைக்கழகத்தின் புற்றுநோய் ஆராய்ச்சி ஆய்வுகூட அதிபரான டாக்டர் றெபேர்ட்போல்ட்வின் கூறினுர்.

இதன்பயனுக ஆராய்ச்சியாளர்கள் இப்போது புற்றுநோய்க்கு எதிராக உடலில் உள்ள இயற்கையான எதிர்ப்புச்சக்திகளைத் தூண்டும் வலுவுள்ள முறை ஒன்றைக் கண்டுபிடிப்பதில் முனைந்துள்ளனர். புற்றுநோயின் மூலவளர்ச்சியைவிட அது தொடர்ந்து பரவுகின்ற உறுப்புக்களால் தான் பெரும்பாலும் மரணம் சம்பவிக்கிறதாம். ஆகவே மூல வளர்ச்சி அகற்றப்பட்ட பின் அது பரவிய இதர இடங்களை எப்படி அகற்றுவது என்பதுதான் இப்போது கண்டுபிடிக்கப்படல் வேண்டும் என்று டாக்டர் போல்ட்வின் கருதுகிருர்.

எலிகளுக்குத் தோலில் ஏற்பட்ட புற்றுநோய், பின்னர் சுவாசப்பையில் கழலையாகப் பரவியநிலையில் பி சி ஜி மருந்து ஏற்றப்பட்டது. இதன்காரணமாக புற்றுநோய் பரவிய கழலைகள் வளராமல் அப்படியே நின்றுவிட்டன.

இரத்தப்புற்றுநோய்எனப்படும் லுக்கேமியாவுக்கு பிரெஞ்சு விஞ்ஞானிகள் பி சி ஜி கொடுத்துப் பார்த்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. பிரிட்டிஷ் வைத்தியசாலைகளிலும் பிரெஞ்சு முறை இப்போது சோதிக்கப்பட்டு வருகிறது.

# “உலகத் தமிழ் மாநாட்டில் பண்டிதர் கலக்கவேண்டும்”

பருத்தித்துறை, செவ்.

கடந்த காலங்களில் மிக கோலாகலத்துடன் நிகழ்ந்த உலகத் தமிழ் மாநாடுகளில் ஈழத்துப் பண்டிதர்கள் எவராவது அழைப்பின் பேரில் பங்குபற்றியதாகவோ அந்நிகழ்ச்சிகளில் தமது பங்கைச் செலுத்தியதாகவோ தெரியவில்லை. தமிழறியாத பிற நாட்டவர் தமிழன்னைக்கு அஞ்சலி செலுத்தக்கிடைத்த அந்த அரிய சந்தர்ப்பம், தமிழையே தமது மூச்சாகக் கொண்ட ஈழத்துத் தமிழ்ப் பண்டிதர்களுக்கு இடையாமை வருந்தற்குரியதாகும்.

இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்ப் பண்டித பட்டதாரிகள் சங்கத் தலைவர் பண்டிதர் க. வீரகத்தி தமிழ் மாநாட்டு ஒழுங்காளரான வண. தனிநாயக அடிகளுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த மாநாடுகளிலாவது தமது சங்கப் பிரதிநிதிகளுக்கு கலந்துகொள்ளச் சந்தர்ப்பமளிக்குமாறு அவர் அக்கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ‘தரங்கெட்ட நாடகங்களை மேடையேற்றக் கூடாது’

—கலையரசு

சுன்னாகம், செவ்வாய்

“சேர் பொன்னம்பலம் இராமநாதன் தமிழ் மக்களின் கலை கலாச்சாரத்தை வளர்க்க தனது சொந்தப் பணத்திலேயே ஆண்களுக்கும் பெண்களுக்குமாக இரு பெரும் கல்லூரிகளைக்கட்டி அதன்மூலம் எமது பாரம்பரியத்திற்கு ஏற்றவாறு கலை, சங்கீதம், நடனம் முதலியவற்றைப் பேணிக்காக்க வழிசெய்தார். இதற்கு உறுதுணையாக கலையரசு சொர்ணலிங்கம் தோன்றியுள்ளார். முதுமையையும் பொருட்படுத்தாது இவர் கலைக்காக உழைத்துவருகிருர்” என்று நல்லூர்த் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சி. அருளம்பலம் சண்டிலிப்பாய் நாம் இலங்கையர் இயக்கத்தின் இரண்டாம் நாள் கலைவிழாவின் பிரதம பேச்சாளராக கலந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

“தேசிய உணர்ச்சியுடன் அமைக்கப்பட்ட ‘நாம் இலங்கையர் கழகம்’ நாடெங்கும் விசாலித்து இயங்குமேயானால் பேதங்கள் அகன்று நாடு முன்னேற வழிபிறக்கும்” என்று எம். பி. சொன்னுர்.

திரு. கு. விநோதன் தலைமையில் விழா நடைபெற்றது. கலையரசு திரு. க. சொர்ணலிங்கம் பேசுகையில் நாடகங்கள்மூலம் நாம் செய்யும் தொண்டு ஒருநல்ல சமூகத்தொண்டாகும். இதனுல் மக்கள் பயன் பெறுவர். ஒருநாடகத்தின் திறனைக் கொண்டுதான் ஒரு நாட்டின் நிலையையும் மக்கள் போக்கையும் கணிக்க முடியும். தரங்கெட்ட நாடகங்களை மேடையேற்றவே கூடாது. புனிதத் தன்மையான கலையை வளர்க்க நாமும் புனிதமான மனப்பான்மையுடன் ஈடுபடல் வேண்டும்’ என்றுர்.

மானிப்பாய் ப. சபைத் தலைவர்; முன்னுள் தலைவர்; கி. ச. தலைவர் உட்பட மற்றும் பலரும் பேசினர். விழாவை கலையரசு சொர்ணலிங்கம் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார்.

இன்னிசைக் கச்சேரிகளும் நாடகங்களும் இடம் பெற்றன. ……

### இசைவிழா

புலோலி, செவ்.

இம்மாதம் 16, 17, 18-ம் திகதிகளில் புலோலி மாதனை அம்மன் முன்றலில் வருடாவருடம் நடைபெறும் இசைவிழா நடைபெற இருக்கிறது.

21ல் உலகவங்கி மாநாடு

# நிதி அமைச்சர் என்.எம் வாஷிங்டன் பயணமானுர்

கோட்டை, செவ்வாய்

வாஷிங்டனில் இம்மாதம் 27-ம்திகதி நடைபெறவிருக்கும் சர்வதேச நாணய நிதி நிறுவனத்தினதும் உலக வங்கியினதும் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா நேற்று புறப்பட்டுச் சென்றுர்.

பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றைக் கூட்டி, இம்மாநாட்டில் தாம் இலங்கையின் சார்பில் வற்புறுத்தவிருக்கும் பல முக்கிய பிரச்னைகள்பற்றி விளக்கினுர். இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் இந்நிறுவனங்களிடமிருந்து விசேஷ கடன் பெறும் உரிமை வழங்கப்படவேண்டும் என்று நிதி அமைச்சர் இம்மாநாட்டில் வற்புறுத்தவிருக்கிருர். இதுபோன்ற கோரிக்கையை கடந்தமாநாட்டிலும் இவர் வற்புறுத்தியது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த மாநாட்டுக்கு முன்னராக அதாவது 24-ம், 25ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் சாம்ராஜ்ய நாடுகளின் நிதி அமைச்சர்கள் மாநாட்டிலும் நிதிஅமைச்சர் பேசுவார். அதிகரிக்கப்பட்ட கப்பல் தீர்வை பற்றி அவர் இங்கு எடுத்துரைப்பார்.

லண்டனில் திரு என் எம் பெரேரா தங்கியிருக்கும் போது பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் இலங்கையின் அவசர பொருளாதார தேவைகள் பற்றியும் பேசவிருக்கிருர். நாடு திரும்பும் வழியில் டோக்கியோவில் தங்கி ஜப்பானிய அமைச்சர்களுடன் இலங்கை-ஜப்பான் வர்த்தக விஸ்தரிப்புப்பற்றியும் பேசுவார்.

இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்கான செலவுகள் அனைத்தையும் இவ்விரு நிறுவனங்கள் பொறுப்பேற்றுள்ளதால், டாக்டர் என் எம் பெரேராவின் விஜயத்துக்கு இலங்கை அரசுக்கு எதுவித செலவுமில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

# இந்திராவின் ரஷ்ய விஜயத்தில் பாரத மக்கள் ஆவல்

## ஒப்பந்தம் செயல்படுத்துவது பற்றி பேசப்படுமா?

புதுடில்லி, செப். 14

பிரதமர் இந்திராவின் ரஷ்ய விஜயத்தைப் பாரதம் மிக ஆவலோடு நோக்கிக் கொண்டிருப்பதாகவும், கிழக்கு வங்காளப் பிரச்னை பற்றிய பேச்சுவார்த்தை அங்கு முதலிடம் பெறும் என்றும் அவதானிகள் கருதுகின்றனர்.

பாரத-ரஷ்ய ஒப்பந்தம் குறித்து ரஷ்யர்களின் கருத்தையறிவதோடு அதைச் செயல்படுத்துவது குறித்து தெட்டத்தெளிவாக மாஸ்கோ அதிகாரிகளுடன் பிரதமர் இந்திரா பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ரஷ்யா உட்பட 5 மேற்கத்திய நாடுகளுக்கு பிரதமர் இந்திராகாந்தி விஜயம் ஒன்றை மேற்கொண்டு இம்மாதம் 27-ம் திகதி புறப்பட்டுச்செல்கிறுர்.

ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட மிகக் குறுகிய காலப் பகுதிக்குள்ளேயே பிரதமர் மாஸ்கோவுக்கு விஜயம் செய்வதால் இவ்விஜயத்தில் முக்கியமான இரகசியம் எதுவும் இருக்கவேண்டுமெனச் சில பார்வையாளர்கள் கருதுகின்றனர். சிலர் ஒப்பந்தத்தில் இருநாடுகளையும் பாதிக்கும் பிரச்னையேற்படும் பட்சத்திலும் முக்கியமான சர்வதேசப் பிரச்னைகளையிட்டும்கிரமமான தொடர்பு ஏற்படவேண்டும் என்ற ஒப்பந்தத்தின் 5-வது பிரிவைச் சுட்டிக்காட்டி பிரதமரின் விஜயம் இவ்வாண்டில் ஒன்றுகவிருக்கும் என அவதானிகள் கருதுகின்றனர்.

இவ்வாறு வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் பிரதமரின் ரஷ்ய விஜயம் பற்றி பல தரப்பட்ட கருத்துகள் நிலவியபோதிலும் பாரதத்திலுள்ள கிழக்கு பாகிஸ்தான் அகதிகளின்பிரச்னையே முக்கிய பிரச்னையாகக் கொண்டு இவர் இங்கு செல்வதாகவும், இவ்விஷயத்தினுல் அகதிகளின் நிலைமை பற்றி சர்வதேசத்துக்கும் தெளிவுபடுத்தமுடியும் என அவர் கருதுகின்றனர்.

## 'ஈழத்து எழுத்தாளர்களை ஆதரியுங்கள்'

வெள்ளவத்தை, செவ்.

"எமது நாட்டின் சொந்தமாக இலக்கியங்களைப் படைத்துக் கொண்டிருக்கும் எழுத்தாளர்களையும் அவர்கள் பங்குகொள்ளும் சஞ்சிகைகளையும் பலமாக ஆதரியுங்கள். ஆரம்பத்தில் எமது பத்திரிகைகள் கசந்தாலும் போகப்போக இனிக்கும். மாங்காயும் பிஞ்சில் கசக்கும். கனிந்தால் இனிக்கும். பொதுமக்கள் ஆதரிக்கும் அளவிற்குத்தான் எமது இலக்கியங்களை நாம் பேணி வளர்க்கமுடியும். எம்மத்தியில் நசுக்கி ஒடுக்கப்படும் சிறுபான்மை மக்களின் உரிமைப் பிரச்சினைகளுக்காகவும் நாம் பாடுபடமுன்வரவேண்டும்'

இவ்வாறு கட்டுபெத்தை இலங்கை உயர் தொழில் நுட்பவியற் கலாசாலைத் தமிழ்மன்றம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்திய கலைவிழாவில் மாலை நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்த மன்றத் தலைவர் திரு இ முத்துநாதிநாதன் உரைநிகழ்த்தினர்.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் திரு எம் எச் சுமணதாச பேசுகையில், 'தமிழ் மாணவர்களின் கலை, இலக்கிய ஆர்வமும் அவர்கள் தமது மொழிக்கும் இனத்திற்கும் ஆற்றும் கடமைகளும் என்னை மிகவும் கவர்கின்றன. முன்னொரு காலத்தில் நாம் எஞ்சினியரிங் படிப்பதென்றால் தனிய அதற்கான பாடங்களை மட்டும் படித்தோம். ஆனால் இப்போது எஞ்சினியரிங் மாணவர்கள் பாடங்களோடு கலை, கலாச்சார விஷயங்களிலும் ஈடுபடுகிறார்கள்' என்றார்.

யுனெஸ்கோ பிரதம தொழில்நுட்ப ஆலோசகர் திரு யோசப்பன் ஆசியுரை வழங்குகையில், 'தமிழர்களின் கலை கலாச்சாரம் பற்றி நான் வெகுவாக அறிவேன். யுனெஸ்கோ ஸ்தாபனத்தின் சார்பில் பல தமிழ் நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. எனவும் இளைஞர்களை நான் மனமார வாழ்த்துகிறேன்' என்றார்.

'நாடகமும் தியேட்டரும்' என்ற தலைப்பில் யுனெஸ்கோ ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு மக்கன்ரையர் உரை நிகழ்த்தினர்.

திரு கு புனிதவேல் வரவேற்புரை நிகழ்த்துகையில் ஈழத்துக் கலைஞரான நாதஸ்வரகானகலாநிதி அளவெட்டி எம் கே பத்மநாதன், நாட்டியச்செல்வி கீதாஞ்சலி சிவாஜிதரை இருவரையும் பாராட்டிப்பேசினர்.

விழாவின் மாலை நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் அளவையூர் பத்மநாதனின் நாதஸ்வரக்கச்சேரியும் இறுதியாக செல்வி கீதாஞ்சலி சிவாஜிதரையின் பரதநாட்டியமும் சிறப்பாக இடம்பெற்றன.

திரு த கிருஷ்ணன் தமிழ் வாழ்த்துப் பாடினர். மன்றச்செயலாளர் திரு. ஐ. பொன்னுத்துரை நன்றி தெரிவித்துப்பேசினர்.

# கம்யூனிஸ்ட் கட்சி கூட்டத்தில் நடந்ததென்ன?

யாழ்ப்பாணம் புதன்

இம்மாதம் 7-ம் திகதி 'ஈழநாட்'டில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்மாவட்டக் கிளைக் கூட்டத்தில் குழப்பம் என்ற தலைப்பின்கீழ் வெளிவந்த செய்தி சம்பந்தமாக கட்சியின் உபசெயலாளர் திரு. ஏ. வைத்திலிங்கம் எழுதுவதாவது:-

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ். மாவட்ட அங்கத்தவர்களின் பேரவை சென்ற 4-ந் திகதி காலை 10-30 மணியளவில் கூடியது. மொத்த அங்கத்தினர்களில் [illegible] 64 சத விகிதத்தவர்கள் சமூகந்தந்தனர். யாழ். மாவட்டக் குழுவின் இடைக்கால சிபார்சுகளும் ஆலோசனைகளும் பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவைகளை அமுல் நடத்துவதற்கு ஒரு அமைப்புக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. இம் முடிவை அடுத்து பல முக்கியமான தற்போதைய அரசியல் தாபன சம்பந்தமான விஷயங்கள் 4-ம், 5-ம் திகதிகளில் விவாதிக்கப்பட்டன.

கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல்குழு உறுப்பினர்களான தோழர்கள் வி. ஏ. சமரவிக்கிரமவும், சி. குமாரசாமியும் கூட்டத்தில் உரையாற்றியதோடு, கட்சியின் செயல்முறைகள் யாழ்ப்பாணத்தில் என்ன நிலையிலுள்ளன என்பது பற்றியும் கலந்துரையாடினர்.

முதலாளித்துவப் பத்திரிகைகளின் பொய்ப் பிரசாரங்களோ, அல்லது சந்தர்ப்பவாதிகளின் முயற்சிகளோ யாழ்ப்பாணத்தில் கட்சியின் வளர்ச்சியையும், வேலைத்திட்டங்களையும் எவ்வழியிலும் பாதிக்கமாட்டா.

பேரவைக் கூட்டத்திற்குப் பின்னர் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்புக்குழு கூடி, வி. பொன்னம்பலம், ஐ. ஆர். அரியரத்தினம், ஏ. வைத்திலிங்கம் ஆகியோர்களை முறையே செயலாளர், அமைப்பாளர், துணைச் செயலாளர் ஆகிய பதவிகளுக்குத் தெரிவுசெய்தது.

## எம். ஸி. க்கு இன்று கார் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவரும் நியமன எம். பி. யுமான திரு. எம். சி. சுப்பிரமணியத்துக்கு பொதுமக்களால் நிதிதிரட்டி வாங்கப்பட்ட கார் இன்று மாலை வழங்கப்படவிருக்கிறது.

யாழ் திறந்தவெளி அரங்கில் மகாசபை உபதலைவர் திரு மாட்டீன் செல்லையா தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பாதுகாப்பு வெளிவிவகார உதவி அமைச்சர் திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி, யாழ் அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகர, வட்டுக்கோட்டை எம் பி திரு அ தியாகராசா, யாழ் நகரமேயர் திரு அல்பிரட் துரையப்பா, கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு அ வைத்திலிங்கம், திரு அ விஸ்வநாதன் எம் எம் ஸி. மகாசபைக் காரியதரிசி திரு எஸ் செல்லையா, திருமதி வேதவல்லி கந்தையா உட்பட பலர் உரையாற்றுவர்.

நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து பி ப 3 மணிக்கு மகாசபைத் தலைவர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார். இசை நிகழ்ச்சிகளும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும் விசேஷ பஸ் வசதிகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

## வெற்றிக் கேடயங்கள்

காலி, செவ்

காலி திறந்தவெளியரங்கில் இம்மாதம் 16ம், 17ம் திகதிகளில் சுவடு மைதான விளையாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. 34 கல்வி வட்டாரங்களில் இருந்து 500 பேர்வரை பங்குபற்றும் இந்நிகழ்ச்சியில் கல்வி அமைச்சர் டாக்டர் அல் காஜ் பதியுதீன் மஹ்மூத் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார்.

பெரும்பான்மையான புள்ளிகளைப் பெறும் பாடசாலைக்கு தகநாயக்கா வெற்றிக் கேடயமும் ஆண்களுக்கான போட்டிகளில் அதிக புள்ளி பெறும் பாடசாலைக்கு வீரக்கன் வெற்றிக் கிண்ணமும் ஆண்களுக்கான ஓட்டப் போட்டியில் வெற்றி பெறுபவர்க்கு எல் எல் டி சில்வா வெற்றிக் கேடயமும் பெண்களுக்கான விளையாட்டுக்கு எம் ஜே எம் முசின் வெற்றிக்கிண்ணமும் உயர்தர மாணவர்க்கான போட்டியில் வெற்றிபெறும் ஆண்களுக்கு மைத்திரிபால சேனநாயக்கா வெற்றிக் கேடயமும் உயர்தர பெண்களுக்கான போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு இ. எல். பி. குறே வெற்றிக்கேடயமும் வழங்கப்படும்.

இவ் விளையாட்டுக்கான ஒழுங்குகளை காலிமாவட்டக் கல்வி அதிகாரி திரு. டி. ஜே. நாணயக்கார செய்து வருகிறார்.

## திரைப்படங்கள் சஞ்சிகைகள் பற்றி ஒரு விவாதம்

வெள்ளவத்தை, செவ்

"ஈழத்தின் திரைப்படங்கள், சஞ்சிகைகள் ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் தடைக்கல்லாக விளங்கும் அனைத்தும் தகர்த்தெறியப்படவேண்டும். மக்கள் தரமானவற்றைத் தெரிந்து வாசிக்கிறார்களில்லை. இலங்கைத் தமிழ் ரசிகர்களுக்கு இங்கு வெளியாகும் தரமான சஞ்சிகைகளைப் பற்றியோ, நாடகங்களைப் பற்றியோ, திரைப்படங்களைப் பற்றியோ எதுவும் தெரியாது. ஆபாச சஞ்சிகைகளையும் படங்களையும் இவர்கள் விரும்புகிறார்கள். ஆகவேதான் வெளிநாட்டுத் திரைப்படங்கள், சஞ்சிகைகளின் இறக்குமதி கட்டுப்படுத்தப்படவேண்டும் என்று நாம் கூறுகிறோம்.

இவ்வாறு சட்டக்கல்லூரி மாணவர் திரு சே. க[illegible]ரன் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற விவாத அரங்கில் பேசுகையில் கூறினர்.

கட்டுப்பெத்தை இலங்கை உயர் தொழில்நுட்பவியற் கலாசாலைத் தமிழ் மன்றத்திற்கும் சட்டக்கல்லூரித் தமிழ்மன்றத்திற்குமிடையே 'சினிமாப்படங்கள், சஞ்சிகைகள் இறக்குமதியைக் கட்டுப்படுத்தக் கூடாது' என்ற தலைப்பில் நடைபெற்ற விவாத அரங்கிலேயே மேற்படி கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

பிரதிவாதிகள் தலைவர் திரு இ சிவபாலன் பேசுகையில் சினிமா பாமரமக்களும் அறியக்கூடிய மாபெரும் இலக்கியம். அது உலகின் எந்தமூலையில் இருந்துவந்தாலும் அதன் வருகையைத் தடைசெய்யக் கூடாது. உலகத்தின் விஞ்ஞானப் புதுமைகள், கலை, கலாச்சாரம் என்பனவற்றை எமது மக்களும் அறிந்துகொள்ளாமல் நாம் கிணற்றுத்தவளைகள் போல இருக்க வேண்டுமா?

கலாச்சாரப் பரிவர்த்தனை என்பது ஒரு வழிப்பாதையல்ல. இறக்குமதி உண்டானால் ஏற்றுமதியும் இருக்க வேண்டும் என்றார். இதைத் தொடர்ந்து வாதிகள் தரப்பில் திருவாளர்கள் சோ. லோகேஸ்வரன், வ. சி. சச்சிதானந்தன் ஆகியோரும் பிரதிவாதிகள் தரப்பில் திருவாளர்கள் வேந்தனார் இளங்கோ, த. வசந்தகுமார் ஆகியோரும் பேசினார்கள்.

கட்டுப்பெத்தை மாணவரின் கலைவிழாவை யொட்டி காலையில் நடைபெற்ற இவ்விவாத அரங்கின் பின்னர் கவியரங்கம் நடைபெற்றது.

'நாளைய உலகம் நமது கைகளில்' என்ற தலைப்பில் நாவற்குழியூர் நடராசன் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் இ. முருகையன், அம்பி, எம். ஏ. நுஃமான், மாவை. நித்தியானந்தன், வே. திருநாவுக்கரசு, கு. புனிதவேல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கலாசாலை மாணவர்களின் 'அம்பிகாபதி அமராவதி' என்ற நவீன கதாகாலட்சேபமும் இடம்பெற்றது.

காலை நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் திரு ப யோகநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு ந மார்க்கண்டமூர்த்தி நன்றிகூறினார். திரு த கிருஷ்ணன் தமிழ்வாழ்த்து இசைத்தார்.

## பயிற்சிவகுப்பு

அம்பன், செவ்

வடமராட்சிப் பகுதி குடிசன வீட்டுவசதித்தொகை மதிப்பு கணக்கெடுப்பாளர்களுக்கான பயிற்சிவகுப்பை கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. ஜே. ஜே. தேவசகாயம் வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி கந்தோரில் நடாத்தினார். மேற்படி காரியாதிகாரி பிரிவு கணக்கெடுப்பாளர்களின் மேற்பார்வையாளராக திரு ஜே. ஜே. தேவசகாயம் நியமிக்கப்பட்டுள்ளார்.





குளிர்மையான,
மெந்தோல் பில்டர் முனை
சிகரெட்டுக்கள். தற்கால நவீன
புகையின்பத்திற்கு
பசுமையுடன் உங்களை
அழைத்துச்செல்வன

நீடிய
குளிர்மையான
மறுமலர்ச்சி
மெட்டஹோன்

CTC சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

# "3ம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் வேண்டும்"

உரும்பராய், செவ்.

"உலகமொழியாகிய ஆங்கிலத்தை மாணவர்களுக்கு 3-ம் வகுப்பிலிருந்தே கற்பிக்கக் கூடிய ஒழுங்குமுறை கவனம் செய்தல் வேண்டும். என்று கல்விப்பகுதியைக் கோரும் தீர்மானமொன்று வலிகாமக் கல்வி தமிழாசிரியர் சங்கத்தின் நிர்வாக மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் காரியதரிசி திரு. அ. பஞ்சாட்சரம் அறிக்கையை சமர்ப்பித்துப் பேசினார். கஷ்டமான பிரதேசங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்றும் கோப்பாய் வட்டாரத்தில் வாதரவத்தை, குட்டியப்புலம் முதலான இடங்கள் கஷ்டமான பிரதேசங்களாகக் கணிக்கப்படக் கூடியவை என்றும் திருமதி வேதவல்லி கந்தையா திரு க. மார்க்கண்டு ஆகியோர் பேசுகையில் குறிப்பிட்டனர்.

வ. கி. த. ஆ. சங்கம் சார்பில் அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்க நிர்வாகசபை உறுப்பினர்களாக தலைவர், காரியதரிசி தனாதிகாரி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். அகில இலங்கை த. சங்க பரிபாலனசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கோழிப் பண்ணைகள் அமைக்கப்படும்

அம்பன். செவ்.

கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நாகர்கோவில் கரையூரில் கோழிப்பண்ணைகள் அமைப்பதற்கான ஏற்பாடுகளை குடத்தனைக்கிராம சபை 10-ம் வட்டார அங்கத்தவரின் அனுசரணையுடன் குடத்தனைக்கிராமசபை அபிவிருத்திச் சபைச் செயலாளர் செல்வி வி சின்னத்துரை செய்துவருகின்றார். இத்திட்டம் இங்கு வெற்றியளித்தால் அம்பன். குடத்தனை ஆகிய இடங்களிலும் கோழிப்பண்ணைகள் அமைக்கப்படுமெனத் தெரியவருகின்றது.

## ஆத்மசாந்திக்கு ஆராதனை

அளியவளை, செவ்.

அமரர் டாக்டர் இ.மு.வி நாகநாதனின் ஆத்மா சாந்தியடைய நல்லூர் தொகுதி மக்கள். இம்மாதம் 18ந்திகதி அஞ்சலிக்கூட்டுப் பிரார்த்தனையும்திவ்விய திருப்பலிப் புனித பாடற்பூசையும் ஒப்புக் கொடுக்கவிருக்கின்றனர்

இந்த நிகழ்ச்சிகள் யாவும் திருநெல்வேலி, நல்லூர் புனித சவேரியார் ஆலயத்தில் நடைபெறவுள்ளன.

## நாகர்கோவில் திருவிழா

அம்பன், செவ்வாய்

வடமராட்சியில் பிரசித்தி பெற்ற ஸ்தலங்களுள் ஒன்றான நாகர்கோவில் நாகதம்பிரான் கோவில் வருடாந்த உற்சவம் வழக்கம்போல் இவ்வருடமும் நடைபெறும் இவ்வருடம் வல்லிபுர ஆழ்வார் வருடாந்த உற்சவம் நடைபெறு தெனத்தெரிய வருகின்றது. வல்லிபுர ஆழ்வார் கோவில் பட்டுத்தீர்த்தத்தின்றே நாகதம்பிரான் கோவில் கப்பல்திருவிழா நடைபெறுவது வழக்கம். வல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்த உற்சவம் நடைபெறாவிடினும் நாகதம்பிரான்கோவில் வருடாந்த உற்சவம் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கோவில் முகாமையாளர் தெரிவித்தார். நாகர்கோவில் நாகதம்பிரான் கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 29ம் திகதி ஆரம்பமாகிறது. அடுத்த மாதம் 5ம் திகதி கப்பல் திருவிழாவும். 6ம் திகதி சப்பறமும், 7ம் திகதி வேட்டைத்திருவிழாவும், 8ம் திகதி தீர்த்தமும் நடைபெறும்.

## அமைச்சின் அலுவல்கள்

யாழ்ப்பாணம், செவ்

தபால் அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர், இம்மாதம் 20-ம் திகதி காலை 11 மணிக்கு தோற்பொருள் கூட்டுத்தாபன கடை ஒன்றை யாழ்ப்பாணத்தில் திறந்து வைப்பார்.

அன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பொதுசன நூல் நிலைய மேல்மாடியில் நடைபெறும் கடற்றொழிலாளர் மகாநாட்டில் அமைச்சர் கலந்து கொள்வார்

மாலை 5 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியில் உப-தபால் நிலையமொன்றை திறந்து வைப்பார்.

இரவு 6 மணிக்கு நாவாந்துறை சுதந்திரக்கட்சி கிளையை திறந்துவைப்பார்.

## கொழும்பில்...

(6ம் பக்கத் தொடர்ச்சி

ஆனால் அவர், இது பாகிஸ்தானின் பிரச்சனையென்றும், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் எவ்வித பிரச்சனையுமில்லை என்றும் பதிலளித்தது ஏமாற்றமாக இருந்தது பிரச்சனை பாகிஸ்தானின் சிருஷ்டிதான் ஆனால் இந்தியாவுக்குத்தானே பளுவெல்லாம்? பழைய மனஸ்தாபங்களை மறந்து. இந்தியப் பிரதமர் அரசியல் தீர்க்கதரிசனத்துடன், பாக். தலைவருடன் பேசுவதாயின் அது மகாத்மா காட்டிய வழிக்கு உகந்ததாகாதா?

0 0 0

அவரைக் கேட்ட மற்றுரு கேள்வி இலங்கையிலிருந்து தாய் நாடு திரும்பியவர்களைப் பற்றியது. இந்தியா திரும்பிய அம்மக்கள் சரிவர பராமரிக்கப்படுகிறார்களா? என்று கேட்டேன். கூடுமானவரை செய்யப்படுகின்றன என்று அவர் பதில் சொல்லுவாரென்று எதிர் பார்த்தேன் ஆனால் என் கேள்வியைப் பற்றி அவர் தவறாக எண்ணியிருக்கவேண்டும். தாடிபற்றி எரிகையில் பீடிக்கு நெருப்புக்கேட்டது போல், லட்சக்கணக்கான அகதிகள் பிரச்னையில் வேதனைப்படுகையில் இலங்கையிலிருந்து திரும்பிச் செல்வோர் விஷயத்தைக் கேட்டதும், அது அவருக்கு ஆத்திரமூட்டிவிட்டிருக்க வேண்டும். அதனால்தான் இக்கேள்வியை அவர்களையே கேட்கவேண்டும்' என்று பதிலளித்தார் போலும். (தொடரும்)

### நெல் உத்தரவாத விலை

## விரைவில் அதிகரிக்க அரசாங்கம் ஆலோசனை

கோட்டை, செவ்,

இப்பொழுது இருக்கும் நெல் உத்தரவாத விலையை விரைவில் அதிகரிப்பது பற்றி அரசாங்கம் ஆலோசித்து வருகிறது. நெல் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் அளித்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்நடவடிக்கை வசதி அளிக்கும் எனக் கருதப்படுகிறது.

இத்தகவலை வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் திரு டி. பி. இலங்கரத்தின செய்தித் திணைக்களத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

பொது மக்களின் பெரும்பாலான பாவனைப் பொருட்களின் விலைகள் உயர்த்தப்படமாட்டாதென்றும், ஆனால் ஆடம்பர ஜவுளிகளின் விலைகள் அதிகரிக்கப்படலாமெனவும் தெரிவித்த அவர் பருத்தி ஆடைகளின் விலைகள் இப்பொழுதிருப்பதுபோலவே இருக்குமெனவும் கூறினார்.

அரசாங்கம் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்திடம் மொத்த விற்பனையைக் கொடுத்திருக்கிறது. இதனால் சில விஷயங்களில் சிறிது மாற்றம் செய்யப்படலாமெனவும் தெரிவித்தார்.

மோட்டார் உதிரிப்பாகங்களின் இறக்குமதி பற்றிக் குறிப்பிட்ட அவர் உதிரிப்பாகங்களின் இறக்குமதியில் 30 வீதத்தை அரசாங்கமும், 70 வீதத்தை தனியார் நிறுவனங்களும் இறக்குமதி செய்யும் என்று தெரிவித்தார்.

## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்கத் தென்மராட்சிக் கிளையின் புதிய உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் வி.பெ. செல்லத்துரை, உபதலைவர்கள் க. நடராசா, இ. வீரகத்தி காரியதரிசி திரு. மு.கதிரேசு உபகாரியதரிசிகள் ச சண்முகம், க. கயிலாயபிள்ளை. தனாதிகாரி: க விநாயகமூர்த்தி, உபதனாதிகாரி: வ. சுப்பிரமணியம். (கு வி.ம.)

0 0

வல்வெட்டித்துறை. செவ்

வல்வெட்டி தர்மகுலசிங்க சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள் திரு தி யோகசாமி, திரு கோ துரைசிங்கம்: தலைவர் திரு நா இராசதுரை; உபதலைவர்: திரு கா அருந்தவம்; செயலாளர்: திரு க ஐயாத்துரை; உபசெயலாளர்: திரு நா இராசசிங்கம்; பொருளாளர்: மா செல்லம். நிர்வாக சபை உறுப்பினர்கள் திருவாளர்கள் செ சண்முகரத்தினம்; பொ நடராத்தினம்; ஞா அருளப்பு; த ஸ்ரீஸ்கந்தராசா.

## இலவச படக்காட்சி

யாழ்ப்பாணம், புதன்

நாளை கிளிநொச்சிப் பகுதிக் காரியாதிகாரி திரு. இ. யோகநாதன் தலைமையில் உருத்திரபுரம் 8ம் வாய்க்கால் காந்திநிலையத்தில் கலாச்சாரப் பகுதியினரால் கலாச்சாரப் படக்காட்சி ஒன்று காண்பிக்கப்படவிருக்கிறது. இதனை அகில இலங்கைக் காந்தி சேவாசங்கத்தினர் ஒழுங்கு செய்துள்ளனர்.

### புனர்நிர்மாணப்பணிக்கு

## அமெரிக்க 25,000 டொலர் அன்பளிப்பு

கோட்டை செவ்

இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் புனர் வாழ்வு புனர் நிர்மாணப் பணிக்கு அமெரிக்காவின் அன்பளிப்பாக 25ஆயிரம் டொலருக்கான காசோலையை இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலை அமைச்சர் திரு மைத்திரிபால சேனநாயக்காவிடம் கையளித்தார்.

இப் பணிக்கு வெளிநாட்டு நாணயமாற்றாகக் கிடைக்கும் முதலாவது அன்பளிப்பு இதுவாகும்.

## ஒக்டோபர் 29ல் பெரியார்களுக்கு நினைவு முத்திரை

கோட்டை. செவ்

சமூகப் பெரியார்கள் அறிஞர்கள் கவிஞர்கள் ஆகியோரை நினைவுகூரும்வகையில் முத்திரைகள் வெளியிட அரசாங்கம் முடிவு செய்துள்ளது. வருகிற ஒக்டோபர் 29-ம் திகதி இலங்கையில் இவ்வகையில் புகழ் பெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் கலாயோகி ஆனந்தகுமாரசாமி ஆனந்த கருணரத்தின மகிந்ததேரோ ஆகியோர் நினைவுமுத்திரைகள் வெளியிடப்படவுள்ளன இவை ஒவ்வொன்றும் 5சத முத்திரைகளாக இருக்கும். இதே தினத்தில் சாகித்திய புத்தகக் கண்காட்சி கொழும்பில் நடைபெறவுள்ளது.

## தாதியை தாக்கினாராம் டாக்டர்

காலி, செவ்வாய்

காலி ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் ஒரு தாதியை டாக்டர் ஒருவர் ரோச் லைட்டினால் தாக்கினாராம். இது சம்பந்தமாக குறிப்பிட்ட தாதி வைத்திய சுப்பிரின்டனிடம் முறையிட்டுள்ளார்.

தொழிற்சங்கங்கள் சுகாதார அமைச்சருக்கும் மாவட்ட வைத்திய அத்தியட்சகருக்கும் அனுப்பி வைத்துள்ள தந்திகளில் உடனடியாக பாரபட்சமற்ற விசாரணை நடத்துமாறு கோரியுள்ளன.

## பர்மாவிலிருந்து அரிசி

யாழ்ப்பாணம், செவ்

பருத்தித்துறை துறைமுகத்தில் பர்மாவிலிருந்து வந்த 105.00 தொன் அரிசி இறக்குமதிவேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறது ஒஸன் என்ரபிறைஸ் என்ற கப்பலிலிருந்து சுமார் 147,000 மூடை அரிசியை தொழிலாளர்கள் இறக்குமதி செய்து வருகின்றனர்.

## ரோமாபுரியில் கருத்தரங்கு

ரோம் செப் 14

அனைத்துலக ரோமன் கத்தோலிக்க மேற்றிராணிமார் கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 30-ம் திகதி நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் இருபெண்களும் கலந்து கொள்வர் என பரிசுத்த பாப்பாண்டவர் 6-வது சின்னப்பர் தெரிவித்துள்ளார்.

அ. இலங்கை உடற்பயிற்சிப்போட்டி

# உரும்பராய் 1-வது; உடுப்பிட்டி 2-வது

குருநாகல், செவ்

அகில இலங்கை உடற்பயிற்சி விளையாட்டுப் போட்டி குருநாகல் சென்ட் அந்தனிஸ் கல்லூரி விளையாட்டுத் திடலில் மகாதேசாதிபதி திரு. வில்லியம் கோபல்லவ தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இவ்விழாவில் குருநாகல் நகரமேயர் திரு தேவநாயகம், டி சேனவிரத்ன, உதவி அமைச்சர் திரு ரி பி விக்கிரமசிங்க, குருநாகல் எம் பி திரு பியதாச விஜேசிங்க, குருநாகல் பொலிஸ் நிலைய அதிகாரி. குருநாகல் மாவட்ட ராணுவ அதிகாரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

வெற்றிபெற்ற பாடசாலைகளுக்கு மகாதேசாதிபதி பரிசில்களை வழங்கினார்.

நாடு பூராவுமிருந்தும் இப்போட்டியில் பல பாடசாலைகள் பங்குபற்றின. பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:

ஆண் 16 வயது

முதலாம் இடம் உரும்பராய் இந்துக் கல்லூரி இரண்டாவது இடம் சென் மேரிஸ் கல்லூரி சிலாபம். மூன்றாவது இடம் மெதடிஸ்ட் களுத்துறை.

17 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள்

முதலாம் இடம் யோசேப் மெதடிஸ் கொலிஜ். வென்னப்புவ. இரண்டாம் இடம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஸன், வல்வெட்டித்துறை. மூன்றும் இடம் சென் அன்ரனிஸ் கல்லூரி. வாரியப்பொல.

பெண்கள்

முதலிடம்: ஆனந்தா பெண்கள் கல்லூரி, மருதானை. இரண்டாம் இடம்: சென்ற் அன்ரனிஸ் கல்லூரி, பாணந்துறை. மூன்றும் பரிசு: இராமநாதன் கல்லூரி, யாழ்ப்பாணம்.


## தம்பி அன் கோ.

ஆரம்பமாகி முப்பதாவது ஆண்டில்

ரூபா 1000/- ஜுபிலி சேமிப்பிற்கு
(Jubilee Deposit)

ஆறு ஆண்டுக்குப்பின் ரூபா 2000/- கொடுக்கப்படும்

ரூபா 500/- ஜுபிலி சேமிப்பிற்கு
(Jubilee Deposit)

ஆறு ஆண்டுக்குப்பின் ரூபா 1000/- கொடுக்கப்படும்

இடையில் இச்சேமிப்பை எடுத்தால்

வருடம் 8 சதவீத வட்டியுடன் கொடுக்கப்படும்.

மறுவிபரங்கட்கு:-

தம்பி அன் கோ.

வண்ணார்பண்ணை ... திருநெல்வேலி.

யாழ்ப்பாணம்.

## மணிவாக்கு

நல்ல குடும்பத்தைப் போன்ற பள்ளி வேறில்லை; ஒழுக்கம் மிக்க பெற்றோர்களைப் போன்ற சிறந்த ஆசிரியர்களும் இல்லை. — சாந்திஅடிகள்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஆவணி மாதம் 30-ந் திகதி (15-9-71)


## தற்கொலைகள்

யாழ்ப்பாணத்திலே மூன்று தற்கொலைகள் நடந்துள்ளதாக நேற்றுப் பத்திரிகையில் செய்திகள் வெளியாகியுள்ளன. இதில் இருவர் இளம்பெண்கள். ஒருவர் வாலிபர். கிருமி நாசினியை அருந்தியே தற்கொலை செய்துகொண்டிருக்கிறார்கள். பொதுவாக நாட்டிலே தற்கொலைகள் அதிகரித்து வருவதாகவும், கிருமி நாசினிகளை அருந்தியே அதில் பெரும்பாலோரும் தற்கொலை செய்துகொள்வதாகவும் தெரிகிறது. கிருமி நாசினிகள் இவ்வளவு கொடிய விஷமென்று தெரிந்தும் அவற்றை யாரும் சுலபமாக வாங்கும்படி அரசாங்கம் அனுமதித்திருப்பது பெரியதவறு.

சாதாரண மருந்துகளை கடைகளில் வாங்கவே, டாக்டரின் அத்தாட்சிப் பத்திரம் தேவைப்படுகிறது. அப்படியிருக்க உயிருக்கே ஆபத்தான இந்த விஷத்தை விற்கவோ, வாங்கவோ தக்க பாதுகாப்புகளைச் செய்ய வேண்டாமா? விவசாயிகளின் பாவனைக்கு இந்த கிருமிநாசினிகள் தேவைதான். என்றாலும் மக்களின் உயிர்களைப் பாதுகாக்க, இதன் விற்பனைக்கும் தக்க நிபந்தனைகளை ஏற்படுத்துவது அவசியமாகும். இவ்விஷயமாக இனியும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்மூடித்தனமாக இருக்கமுடியாது.

இதுபற்றிய மரண விசாரணைகளில் "தற்கொலை" என்று சாதாரணமாகத் தீர்ப்பளிக்கப்படுகின்றது. ஆனால் ஒவ்வொரு தற்கொலையும் ஒரு சமூகச்சிக்கலையே குறிக்கும். காதல், பணக்கஷ்டம், குடும்பத் தகராறு முதலிய பற்பல காரணங்களாலேயே, மனம் உடைந்து, வாழ்க்கையிலேயே வெறுப்பு ஏற்பட்டு, தற்கொலை செய்துகொள்ள நேரிடுகிறது. ஒவ்வொரு தற்கொலை, கொலை இவற்றுக்கான அடிப்படை காரணங்களை விரிந்த முறையில் விசாரித்து, சமூகத்திலுள்ள குறைகளை உணர்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வது சமூகத் தலைவர்களின் முக்கிய கடமையாகும். தற்கொலைகளை அடியோடு ஒழித்துவிட முடியாதுதான் என்றாலும் சமூக சிக்கல்களை அறிந்து அவற்றைக்கூடுமானவரை நீக்கமுற்படுவது, தற்கொலைகளைக் குறைக்கவும் சமூகத்தில் அமைதி மேம்படவும் உதவியாக இருக்கும்.

உதாரணமாக குடும்பத்தில் ஏற்படும் சிக்கல்களைப்பற்றி விசாரித்து அவற்றை சுமுகமாகத் தீர்த்துவைக்க சில குருமார்கள் உதவுகின்றனர். மனம் உடைந்தவர்களுக்கு ஆறுதலும் வாழ்க்கையில் நம்பிக்கையும் அளிக்க, தக்க அனுபவஸ்தர்கள் அடங்கிய குழுக்களை ஏற்படுத்தினால் அவர்கள் மூலம் தங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள பலரும் முயலக்கூடும். சிக்கல் எதுவாயினும் சரி. அதை நல்லபடி தீர்க்கவும், உயிர்களைக் காக்கவும் ஏதாவது வழி இருக்கவே வேண்டும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முற்படுவது சமூகத் தலைவர்களின் மேலான கடமையாகும். நாட்டில் நடைபெறும் பல பரிதாபமான தற்கொலை நிகழ்ச்சிகள் இக்கடமையை வற்புறுத்துவனவாக இருக்கின்றன.

## குருஷ்சேவ் மறைவு

சோவியத் யூனியன் முன்னாள் பிரதமரும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் முதல் காரியதரிசியுமான திரு நிகிட்டா குருஷ்சேவ் காலமானார் என்ற செய்தி சோவியத் மக்களுக்கோ கம்யூனிஸ உலகுக்கோ மட்டுமல்லாது இதர பல சமூகங்களையும் சேர்ந்த மக்கள் பலருக்கும் கவலையளித்திருக்கும்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் ஆட்சிபீடமும் சோவியத் மக்களும் திரு குருஷ்சேவை பதவியிலிருந்து நீக்கி ஒதுக்கிவைத்திருந்த போதிலும் உலகம் அவரை மறந்துவிடவில்லை.

விண்வெளி ஆராய்ச்சியில் உலகில் முதலில் பெரும் சாதனையை சோவியத் நாடு நிலைநாட்டியதென்றால் அந்தப் பெருமை திரு குருஷ்சேவையே சாரும். மக்களுடன் நெருங்கிப் பழகிய பெரும் தலைவரும் அவரே. இரும்புத்திரையை ஓரளவு நீக்கியவரும் இவர்தான்.

கியூபா நெருக்கடி உச்சக்கட்டத்தை அடைந்து மூன்றாவது உலகயுத்தம் ஆரம்பித்து உலகமே அழிவின் எல்லைக்கோட்டை நெருங்கிக்கொண்டிருந்த சமயத்தில் வரட்டுக்கௌரவம் பாராமல் உலகை அழிவிலிருந்து காப்பாற்றி சமாதான வீரராகத் திகழ்ந்த தலைவர் திரு குருஷ்சேவ்தான். வேற்றுமையிலும் ஒற்றுமை காணலாம், கம்யூனிஸம் அல்லாத நாடுகளுடனும் கம்யூனிஸ் நாடுகள் இணைந்து வாழ முடியுமென்ற நிலையை ஏற்படுத்திய பெருமையும் அவருக்குண்டு.

சில சமயங்களில் முற்கோபியாகத் தோன்றிய போதிலும் எந்நேரமும் எவருடனும் கலகலப்பாகப் பழகும் பண்பும் நகைச்சுவையுடன் பேசும் ஆற்றலும் பெற்றிருந்தவர் குருஷ்சேவ். வாஷிங்டன் வெள்ளைமாளிகைக்கும் மாஸ்கோ கிரெம்லின் மாளிகைக்கும் நேரடித் தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்தி பேச்சுவார்த்தை மூலம் பிரச்னைகளைச் சமாளிக்க முடியுமென்பதைச் செயலில் காட்டிய திரு குருஷ்சேவின் வழியில்தான் இப்போது எதிரும் புதிருமாக இருந்த அமெரிக்கத் தலைவரும் சீனத் தலைவரும் சந்தித்துப் பேசும் சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. குருஷ்சேவ் வாழ்கிறார் என்பதற்கு இதுவே போதும்.

# கொழும்பில் பத்து நாட்கள்

கொழும்பிலே இம்முறை பத்துநாட்கள் தங்கியிருந்தேன். இந்திய வெளிவிவகார அமைச்சர் சுவரண்சிங்கை பத்திரிகைக்காரர் மகாநாட்டில் சந்தித்தேன். பார்லிமெண்டிலே மூன்று மாதங்களுக்கான அதிகப்படி வரவு-செலவுத் திட்ட விவாதம் நடந்தபோது மூன்று நாட்களும் அச்சபைக்குச் சென்றிருந்தேன். இது தவிர இந்தியாவிலிருந்து கொழும்புக்கு வந்துள்ள சுவாமி சாந்தானந்தாவின் கூட்டங்களிலும் கலந்துகொண்டேன். அங்கெல்லாம் கண்டதையும் கேட்டதையும் பற்றி என் மனதில் பதிந்த சில கருத்துக்களை இங்கு கூறவிரும்புகிறேன்.

வெளிநாடுகளிலிருந்து பல பிரதமர்களும் அமைச்சர்களும் சுதந்திர இலங்கைக்கு வந்திருக்கிறார்கள். நாடு அரசியல் விடுதலை பெற்றதன் பலன்களில் இதுவுமொன்று. வந்தவர்கள் திரும்பிச் செல்லுமுன் கடைசிநிகழ்ச்சியாக பத்திரிகைப் பிரதிநிதிகள் கூட்டத்தில் பேசுவதும் கேள்விகளுக்கு பதில் அளிப்பதும் ஒரு சம்பிரதாயம். நாம் அந்நாடுகளுக்குச் சென்று அவர்களைக் கண்டு பேசுவதென்பது துர்லபம். ஆகவே அவர்கள் இங்கு வரும்போது அவர்களை நேரில் காணக்கூடிய சந்தர்ப்பத்தை இழக்கலாமா?

0 0 0

'குட் மார்னிங். என்னை மன்னிக்கவேண்டும். இங்கு குறித்த நேரத்துக்கு வரத் தாமதமாகிவிட்டது. பேச்சுகள் முடிந்து, நேரே அங்கிருந்து வருகிறேன்' என்று இரு கரங்களையும் கூப்பி சிரித்துக்கொண்டே, களைப்புடன் அமைச்சர் சுவரண்சிங் பத்திரிகைக்காரர் கூட்டத்துக்கு வந்தார். எல்லோரும் எழுந்துநின்று அவருக்கு மரியாதை தெரிவித்தனர்.

இரு அரசாங்க கூட்டு அறிக்கை தயாராகிறதென்றும் சில நிமிடங்களில் அது கிடைத்துவிடுமென்றும், அதைப் படித்தபின் அதன் மீது கேள்விகள் கேட்பது உசிதமாகுமென்றும் அவர் யோசனை கூறினார். சில நிமிடங்களில் கூட்டறிக்கை கிடைத்தது. அதை ஓர் அதிகாரி படித்தார்.

பின்னர் பல நிருபர்களும் கேள்விகள் கேட்டனர். எல்லாவற்றுக்கும் அவர் பதில் அளித்தார். சில கேள்விகளைத் தயாரித்துக்கொண்டு சென்றேன். ஆனால் அவரைக் கேட்கத் தயக்கம். ஏனெனில் ஒருபுறம் பாகிஸ்தானிலிருந்துவரும் அகதிகள் பிரச்னை மலைபோன்றது. சோவியத்துடன் செய்துகொண்ட நட்பு ஒப்பந்தம் பற்றி இலங்கையில் பலருக்குத் தப்பபிப்பிராயம். இங்குள்ள பத்திரிகைகளில் பல இந்தியாவைத்தாக்கி கட்டுரைகளும் எழுதின. எதிர்ப்பு சூழ்நிலையில் அவரைக்கேள்வி கேட்பது புண்ணில் குத்துவதுபோல் இருக்குமோ என்பதே தயக்கத்துக்குக் காரணம்.

ஆனாலும் விஷயம் முக்கியமாகத் தோன்றியதால் கேட்கத் துணிந்தேன். சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரர் காலில் விழுவது மேல் என்று ஒரு வசனமுண்டு. பாகிஸ்தானிடம் இந்தியா நட்புறவு கொள்ள வேண்டுமென்று அரசியல் ஞானியான ராஜாஜி ஒரு முக்கிய யோசனை கூறினார். பாகிஸ்தான் ஜனாதிபதியான யாஹ்யாகான், இந்தியப்பிரதமர் இந்திராகாந்தியின் முகம் பிடிக்கவில்லையென்றும், அவர் பெண்ணுமல்ல நாட்டின் தலைவருமல்லவென்றும் மிக மனக்கசப்புடன் கூறியதாகவும் ஒரு வெளிநாட்டுப் பத்திரிகையில் செய்திவந்ததைப்படித்தேன்.

இந்தியப்பிரதமரை அகதிகள் விஷயமாக நேரில் பார்த்துப் பேசவேண்டுமென்பது பாகிஸ்தான் தலைவரின் ஆவல். ஆனால் இந்தியப்பிரதமர் இதற்கு சம்மதியாததால் அவர் அதிக மனக்கசப்புக் கொண்டுள்ளது இதிலிருந்து தெரிகிறது. ஓர் இந்திய

**கே.பி.ஹரன்**

விமானத்தைக் கடத்திச் சென்று லாகூரில் அதை நாசமாக்கியதிலிருந்து பாகிஸ்தான் மீது இந்தியாவுக்கு ஆத்திரமேற்பட காரணமுண்டு. உடன் தக்க சமாதானம் கூறி ஈடு செய்திருப்பின் பாகிஸ்தானுக்கே அது அதிக நன்மையாக இருந்திருக்கும். அப்படிச்செய்யாததால் இந்தியாவின் மீது பாக். விமானங்கள் பறந்து செல்லப்படாதென்ற தடையை இந்தியா விதிக்க நேரிட்டது; அதனால் பின்னர் பாக். ஜனாதிபதிக்கு ஏற்பட்ட சங்கடங்களை விளக்கத் தேவையில்லை.

இது ஒருபுறமிருக்க, 80 லட்சம் அகதிகளைப் பராமரிக்க இந்தியாவுக்கு நாள் ஒன்றுக்கு இரண்டரை கோடி ரூபாய் செலவாகிறதாம். வெளிநாடுகளிலிருந்து கிடைத்த உதவிகள் ஒரு வாரச் செலவுக்கே போதுமானதென்றார் இந்திய அமைச்சர். உண்மையில் இந்தப் பிரச்னை பாகிஸ்தானுடையதே என்றாலும், இந்தப் பளு அனைத்தும் இந்தியாவின் தலையிலேயே சுமத்துள்ளது. இந்தப் பிரச்னையைத் தீர்க்க இந்தியா பல வெளிநாடுகளையும் அணுகுகின்றது. இந்தியப் பிரதமரும் இது விஷயமாக அமெரிக்கா செல்லவிருக்கிறார். அமைச்சர் சுவரண்சிங் இங்கு வந்த முக்கிய காரணங்களில் ஒன்று, இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாண இலங்கையின் ஆதரவைப் பெறுவதாகும். மனிதாபிமான காரணத்தால் கிழக்குப் பாகிஸ்தான் பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாண வேண்டுமென்று இலங்கையும் மேற்குறித்த கூட்டறிக்கையில் ஒப்புக்கொண்டிருக்கிறது. அவ்வித தீர்வுகாண இன்னும் எவ்வளவு காலமாகுமோ?

இந்நிலையில் பாகிஸ்தான் தலைவருடனே இந்தியப் பிரதமர் நேரில் பேசினால் என்ன? இதற்கு ஏதும் தடையுண்டா? என்று சுவரண் சிங் அவர்களைக் கேட்டேன். துரதிஷ்டமான அகதிகள் பிரச்னைக்குச் சீக்கிரத்தில் சுமுகமான முடிவு ஏற்படவும், இரு நாடுகளுக்குமிடையே நல்லுறவு ஏற்படவும், இரு நாட்டுத் தலைவர்களும் நேரில் பேசுவது பயனளிக்கும் என்ற நல்லெண்ணத்துடனேயே கேட்டேன். ஆம், நிலைமை சாதகமாக இருப்பின் சந்தித்துப் பேசலாமென்று அவர் பதிலளிப்பாரென்றும் எதிர்பார்த்தேன்.

(5ம் பக்கம் பார்க்க)

இன்று அண்ணா பிறந்ததினம்

## அண்ணா நின் புகழ் நீடு வாழ்க

— வன்னியூர்க் கவிராயர் —

கண்ணியம், கடமை, கட்டுப்
பாடெனும் மூன்றினைத்தன்
எண்ணத்தில் எழுத்தில் பேச்சில்
செயல்களில் நனவில் அன்றிக்
கண்ணிலும் மணியாய்ப் பேணிக்
கனவிலும் காத்து வாழ்ந்தோர்
அண்ணா நின் கொள்கையோங்கி
அனவரதமுமே வாழ்க!

கலைநலம் பல்குங் காஞ்சிக்
கலைக்கோயில், நடமாடும்பல்
கலைக்கழகம், தென்னாட்டுக்
கரிபால்டி, தமிழ் இங்கர்சால்,
மலையனைத் திடனும் சற்றும்
மனமசை யாதசித்தன்
நிலைபெறு புகழ்சேர் அண்ணா
நின்புகழ் நீடு வாழ்க!

(வேறு)

தோற்றத்தி லே எளிமை, சொற்செவி லே வலிமை,
மாற்றார் கருத்துக்கும் மதிப்பளிக்கும்
பண்புடைமை
தீர்க்க தரிசனஞ்சேர் சிந்தனையின் ஊற்று. வையம்
போற்றும் புயல்வேகத் தப் பேச்சு(ப்) புலமைசுடும்
வீரப் புரட்சித்தீ வீசெழுத்து வன்மை, முத்தின்
ஆரம் எனவெதுகை மோனை அடுக்கு மொழி
முக்கனியின் சாறு, சர்க்கரை, முதுதேன்,
தெள்ளமுதை
ஒக்கக் கலந்தசுவை யூட்டு மதுரப்பேச்சின்
கூட்டுமொத்த மானவுரு வாகப்பிறந்தே,
செந்தமிழர்
நாட்டின் தலைமகனும் நற்செயலா லே யுயர்ந்
தோர்
நடராஜன் - பங்காரு அம்மையுவிக் கீந்த தமிழ்ச்
சுடர் அண்ணா கொள்கையெனுஞ் சோதியொளி
வீசுகவே!

இப்பத்திரிகை "ஈழநாடு லிமிட்டெட்" ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.